தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் வார் ரூமை தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன், கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. ஆகியோர் இணைந்து திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ. பச்சையப்பன், தினேஷ், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே. சரவணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.குபேர் இளம்பரிதி, தலைவர் நாகராஜன், துணைத்தலைவர் அழகர்சாமி, துணை அமைப்பாளர்கள் பிரபு, மகேந்திர குமார், வெயில் முத்து, விநாயக மூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சீனிவாசன், அயலக அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.பி.அசோக், அயலக அணி துணை அமைப்பாளர் என். எஸ்.கிறிஸ்டோபர், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அபிராமி நாதன் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உயர் கல்வித் துறை மற்றும் பிரிட்டிஸ் ஹை-கமிஷன் இணைந்து,

# 'யங் புரொபசனல் ஸ்கீம்' திட்டத்தின் மூலம் 3000 இளைஞர்களுக்கு விசா விண்ணப்பம் பெறுவதற்கான நிகழ்வு!

### உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் - பிரிட்டிஷ் உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லீஸ் முன்னிலையில் நடைபெற்றது!

சென்னை, பிப்.21- அண்ணா பல்கலைக் கழக விவேகானந்தர் கூட்டரங்கில் 20.02.2024 அன்று பகல் 2 மணியளவில் உயர்கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் மற்றும் பிரிட்டிஷ் உயர் ஆணையர் அலெக்ஸ் எல்லீஸ் முன்னிலையில் தமிழ்நாடு உயர்கல்வித் துறை மற்றும் பிரிட்டிஸ் ஹை - கமிஷன் இணைந்து, 'யங் புரொபசனல் ஸ்கீம்' திட்டத்தின் மூலம் 18 முதல் 30 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு விசா விண்ணப்பம் பெறுவதற்கான நிகழ்வு நடைபெற்றது.

இதன் மூலம் நமது இந்திய இளைஞர்கள் இரண்டு வருட காலத்திற்கு பிரிட்டன் சென்று வேலைவாய்ப்பு பெறவும், பிரிட்டிஷ் இளைஞர்கள் நமது இந்தியாவில் தங்கி வேலைவாய்ப்பு பெறவும் வழி செய்கிறது. இதன் மூலம் இருநாட்டு இளைஞர்களும் தங்களுடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவும் தொழில் துறை சார்ந்த அறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் துணை செய்கிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியை மேம்படுத்தி, புதுமையான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 28 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 'புதுமைப் பெண்' திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் 3 லட்சம் மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக மாதம் ரூபாய் 1000- வழங்கும் திட்டமும் செயல்படுத்தி வருகிறார் என்றும் தெரிவித்தார்.

மேலும் 2024-2025 பட்ஜெட்டில் முதலமைச்சர் அவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவியர்களுக்கும் புதுமைப் பெண் திட்டம் அமல்படுத்தப்படும் என தெரிவித்து ரூ.370 கோடி நிதி வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதுபோலவே அரசு பள்ளியில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கும் 'தமிழ் புதல்வன்' என்னும் திட்டத்தின் கீழ் மாதம் ரூ,1000 வழங்க அறிவித்துள்ளார்கள் என தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், உயர்கல்வியில் தொழில்முறை படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீட்டை நமது தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார் என்றும், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன் மாதிரி மாநிலமாக திகழ்கிறது என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய வெளியுறவு அமைச்சக குடியேற்றக் கொள்கைத் திட்ட இயக்குநர் நிதேஷ்குமார், அண்ணா பல்கலைக்கழக துணை வேந்தர் ஆர்.வேல்ராஜ், கிண்டி அண்ணா பொறியியல் கல்லூரி டீன் சுகந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.